DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : சேர்மராஜ் | Father/Husband Name : கருப்பசாமி |
| Age : 27 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : லோடுமேன் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Nov 5, 2025 12:09 PM
(Accused Present)

**<u>முதல் விசாரணை</u> :-**

1. நான் சாத்தூரில் குடியிருந்து வருகிறேன். லோடுமேன் வேலை செய்து வருகிறேன்.

2. இவ்வழக்கில் வாகன விபத்தில் இறந்துபோன கருப்பசாமி எனது அப்பா ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 26.10.2019 ம் தேதி இரவு சுமார் 07.15 – 07.20 மணி இருக்கும் நானும் எனது நண்பர் மாரிமுத்து என்பவரும் சாத்தூர் வெள்ளக்கரை ரோடு SSS காம்ப்ளக்ஸ் முன்பாக நின்று பேசிக்கொண்டிருந்தோம். சாத்தூர் – கோவில்பட்டி செல்லும் பைபாஸ் ரோட்டில் ஒரு நபர் மேற்கிலுள்ள நெடுஞ்சாலையை கடந்து கிழக்கு நெடுஞ்சாலையில் கிழக்கு ஓரமாக நடந்து வந்துகொண்டிருக்கும்போது வடக்கிலிருந்து தெற்குநோக்கி வந்துகொண்டிருந்த TN 04 K 3370 என்ற பதிவெண் கொண்ட மாருதி காரினை ஆஜர் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து அந்த நபரின் மீது மோதினார். நானும் மாரிமுத்தும் அங்கு சென்று அந்த நபரை பார்த்தபோது, காயம்பட்ட நபர் எனது அப்பா கருப்பசாமி என்பது தெரியவந்தது. அந்த விபத்தில் எனது அப்பாவிற்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது, இடது காலில் இரத்தக்காயம் எற்பட்டிருந்தது. எனது அப்பாவின் பின்தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. முதுகிலும், கையிலும் சிராய்ப்பு காயம் ஏற்பட்டிருந்தது.

3. காயம்பட்ட எனது அப்பாவை தனியார் அவசர ஊர்தி மூலமாக சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தோம். அன்று இரவு 08.00 மணியளவில் எனது அப்பா சிகிச்சை பலன் இல்லாமல் இறந்துவிட்டார். பின்னர் நடந்த சம்பவத்திற்கு நானும், பசுபதி என்பவரும் சாத்தூர் நகர் காவல்நிலையம் சென்று நடந்த சம்பவத்திற்கு புகார் மனு அளித்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் காவல்நிலையத்தில் அளித்தது தான். அதில் பசுபதி அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தார். (**<u>புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**). பின்னர் எனது அப்பாவின் உடலை உடற்கூராய்வு செய்தார்கள். இது தொடர்பாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

4. அவசர ஊர்தி வாகனத்திற்கு யார் போன் செய்து கூறினார்கள் என்றால் சம்பவ இடத்தில் இருந்த பொதுமக்கள் போன் செய்து கூறியதன் பேரில் வந்தது. அங்கு எத்தனை நபர்கள் கூடியிருப்பார்கள் என்றால் சுமார் 50 நபர்கள் கூடியிருப்பார்கள். அந்த நபர்களின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் என்னுடைய அப்பாவிற்கு விபத்து ஏற்பட்ட பதட்டத்தில் நான் அதை கவனிக்கவில்லை. நான் உடனடியாக போலீசாருக்கு தகவல் கூறினேன் என்றால் இல்லை. நான் சாத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்தபோது மருத்துவமனையில் இருந்து போலீசாருக்கு தகவல் கூறினார்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் சாத்தூர் நகர் காவல் நிலைய போலீசார் அரசு மருத்துவமனைக்கு

வந்து என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அப்பொழுது என்னுடன் யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் சாட்சிகள் பசுபதி மாரிமுத்து மற்றும் வெங்கடேஷ் ஆகியோர் இருந்தார்கள்.

5. சடல கூறாய்வு செய்யும் வரை நான் மருத்துவமனையில் தான் இருந்தேன் என்றால் சரிதான். புகாரை எழுதியது யார் என்றால் பசுபதி எழுதினார். நான் அரசு மருத்துவமனையில் வைத்து தான் அந்த புகாரை போலீசாரிடம் கொடுத்தேன் என்றால் விபத்து நடந்த தேதியில் இரவு 9 மணிக்கு சாத்தூர் நகர் காவல் நிலையத்திற்கு சென்று கொடுத்தேன். இந்த புகாரில் நான், பசுபதி, மாரிமுத்து மற்றும் வெங்கடேஷ் ஆகிய நான்கு பேரும் கையொப்பம் செய்தோம் என்றால் நானும் பசுபதியும் மட்டும் கையொப்பம் செய்தோம். அ.சா.ஆ.1 – புகார் மனு இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்தப் புகார் மனு நான் கொடுத்ததே இல்லை என்றால் சரியல்ல.

6. வழக்கு சம்பவம் சாத்தூரில் இருந்து கோவில்பட்டி செல்லக்கூடிய நான்கு வழிச்சாலையில் (கிழக்குப்புற சாலையில்) நடைபெற்றது என்றால் சரிதான். நானும் மாரிமுத்துவும் SSS காம்ப்ளக்ஸ் அருகே நின்று கொண்டிருந்தோம் என்றால் சரிதான். இந்த விபரத்தை நான் கொடுத்த புகார் மற்றும் போலீசார் என்னை விசாரணை செய்தபோது கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த காம்ப்ளக்ஸ் நான்கு வழிச்சாலையின் மேற்கு புற சாலைக்கும் மேற்கே இருக்கிறது என்றால் சரிதான். நான்கு வழி சாலைக்கும் அந்த காம்ப்ளக்ஸ்க்கும் இடையே மேற்கு புற அணுகு சாலை இருக்கிறது என்றால் சரிதான். நான்கு வழி சாலையின் மேற்கு பக்கத்திலிருந்து கிழக்கு பக்கம் ஆட்கள் கடக்க கூடாது என்பதற்காக இரும்பு கம்பி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. நான் நின்று கொண்டிருந்ததாக கூறும் இடத்தில் இருந்து வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் இடத்திற்கு சுமார் 150 அடி தூரம் இருக்கும் என்றால் 100 அடி தூரம் இருக்கும். வழக்கு சம்பவம் இரவு 7:30 மணியிலிருந்து 8:00 மணிக்குள் இருக்கும் என்றால் 07.15 மணியிலிருந்து 7:30 மணிக்குள் இருக்கும். இரவு நேரத்தில் அந்தப் பகுதி இருட்டாக இருக்கும் என்றால் சரிதான். நான் இருந்த பகுதியில் இருந்து வழக்கு சம்பவம் நடைபெற்ற பகுதியை வழக்கு சம்பவ நேரத்தில் பார்த்தால் தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெற்ற பிறகு சத்தம் கேட்டு தான் நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன் என்றால் சம்பவத்திற்கு பிறகு அங்கே கூட்டம் கூடிவிட்டார்கள், அப்பொழுது நான் சென்று பார்த்தேன். நான் அங்கு சென்று பார்த்த பிறகு தான் விபத்தில் காயம் பட்ட நபர் என்னுடைய தந்தை என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

8. வழக்கு விபத்து நடைபெற்ற காலத்தில் என்னுடைய அப்பா எங்கு குடியிருந்தார் என்றால் எங்களுடன் ஒன்றாக தான் வசித்து வந்தார். எங்களுடைய வீடு SSS காம்ப்ளக்ஸ்க்கு மேற்கு பக்கம் இருக்கிறது என்றால் நான்கு வழிச்சாலைக்கு கிழக்கு பக்கம் இருக்கிறது. என்னுடைய அப்பா எங்கு இருந்து எங்கு சென்றார் என்றால் நான்கு வழிச்சாலையின் மேற்கு பக்கத்திலிருந்து கிழக்கு பக்கம் சென்றார். இந்த விபரத்தை நான் யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் அங்கு இருந்த மக்களிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். பொதுவாக இந்த வழக்கு விபத்து நடைபெற்ற பகுதியில் இருந்து எங்களுடைய வீடு இருக்கக்கூடிய வெள்ளை கரை சாலைக்கு நான்கு வழி சாலையின் மேற்கு பக்கத்திலிருந்து கிழக்கு பக்கம் வரவேண்டும் என்றால் நான்கு வழி சாலையில் உள்ள பாலத்தின் வழியாக வந்து தான் வர வேண்டும் என்றால் சரிதான்.

9. என்னுடையஎன்னுடைய அப்பா சாலை விதிகளை பின்பற்றாமல் திடீரென நான்கு வழி சாலையின் மேற்கே இருந்து கிழக்கு பக்கமாக கடந்து சென்ற போது விபத்து நடைபெற்றது என்றால் நான்கு வழிச்சாலையில் உள்ள கம்பி தடுப்பு தற்போது தான் வைக்கப்பட்டுள்ளது, வழக்கு விபத்து நடைபெற்ற போது அந்த கம்பி தடுப்புகள் வைக்கப்படவில்லை. கம்பி தடுப்புகள் வழக்கு சம்பவத்திற்கு முன்பாகவே

அமைக்கப்பட்டிருந்தது என்றாலும், நான் வழக்கிற்காக வழக்கு சம்பவத்திற்கு பிறகு அமைக்கப்பட்டது என்று கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. நான்கு வழிச்சாலையில் விபத்து நடைபெற்ற பகுதியில் மேற்கிலிருந்து கிழக்கு பக்கம் சாலையை கடக்க முறைப்படியான பாதை வகுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

10. வழக்கு விபத்தை ஏற்படுத்தியதாக கூறும் நபரின் பெயர் மற்றும் முகவரியை யாரிடம் கேட்டு நான் தெரிந்து கொண்டேன் என்றால் சாட்சி பசுபதியிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். ஆஜர் எதிரியை நான் இன்று தான் முதல்முறையாக பார்க்கிறேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து பார்த்தேன். எதிரி எவ்வளவு வேகத்தில் வந்தார் என்பதை என்னால் கூற முடியாது என்றால் சரிதான். விபத்து நடைபெற்றதால் எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்ததாக கூறுகிறேன் என்றால் சரிதான். எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வரவில்லை என்றாலும், அவர் மிதமான வேகத்தில் தான் வாகனத்தில் வந்தார் என்றாலும், அவருடைய கவனக்குறைவால் வழக்கு விபத்து நடைபெறவில்லை என்றாலும், என்னுடைய அப்பாவின் கவனக்குறைவால் சாலையை கடந்த போதுதான் வழக்கு விபத்து நடைபெற்றது என்றாலும் சரியல்ல.

11. வழக்கு விபத்து நடைபெறும் போது என்னுடைய அப்பாவிற்கு எத்தனை வயது இருக்கும் என்றால் சுமார் 50 வயது இருக்கும். என்னுடைய அப்பாவிற்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். வழக்கு விபத்து நடைபெற்ற தேதியிலும் என்னுடைய தந்தை மது அருந்து இருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. வழக்கு சம்பவத்தின் போது என்னுடைய தந்தை மது அருந்திருந்தார் என்றாலும், மது போதையில் சாலை விதிகளை கடைபிடிக்காமல், திடீரென சாலையை கடந்த போது விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. என்னுடைய தந்தையின் இறப்பு தொடர்பாக இழப்பீடு கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எங்களுக்கு கூடுதலான இழப்பீடு தொகை கிடைக்க வேண்டும் என்பதற்காக என்னுடைய தந்தை மது அருந்திருந்ததை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12. வழக்கு சம்பவம் நடைபெற்ற போது நான், பசுபதி, மாரிமுத்து, வெங்கடேஷ் ஆகியோர் வழக்கு சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. இறந்து போன நபர் என்னுடைய தந்தை என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்தின் போது ஆஜர் எதிரி வழக்கு விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Nov 5, 2025 12:39 PM

Judicial Magistrate 2, Sattur.